அப்படியில்லாமல் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கும் தொழிலாளர்களையே போடுவதற்கு முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்பாக்கம் திட்டத்தைப் பார்வையிட்டபோது அங்கே இப்போது கட்டட வேலைகள், சாலை வேலைகள் இவற்றிலே செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அங்கே இருக்கும் எஞ்சினீயர்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். முக்கியமாக திரு. சிவா என்பவர் கூட நம் மாநிலத்தைச் சேர்ந்தவர்தான். நூறு கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக செலவழிக்கப்படுகிறதென்றாலும் கட்டடங்கள் எல்லாம் மிகச் சிறிய அளவிலே தான் இருக்கும். செலவு அதிகமாக இருக்கும். இதனால் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் 500 அல்லது ஆயிரம் பேர்களுக்கு அதிகமாக இருக்கமாட்டார்கள். ஆகையால், இந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய நிலைமை இருக்கும். பம்பாயில் டிராம்பே அணுசக்தி மின் நிலையத்திலே இந்த மாநிலத்தைச் சேர்ந்த என்ஜினியர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்கிறபோது இங்கே நிச்சயமாக அவர்கள் இடம் பெறுவார்கள்.

உணவு உற்பத்திக்குப் பயன்படும் மின்சாரம்

■ 475 வினா.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. நா. வீராசாமி :
திரு. வி. டி. அண்ணாமலை :
திரு. வி. டி. அண்ணாமலை :
திரு. என். கிட்டப்பா :
} மதிப்பிற்குரிய

கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவு உற்பத்திக்கு உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கு கட்டணத்தை பாதியாகக் குறைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அவ்வித திட்டம் ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தில் பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டபோதிலும், அதை ஏற்றுக்கொள்ளுவதைப் போல், உணவுப் பெருக்கத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலும்,

1967 நவம்பர் 28]

மின்சாரக் கட்டணத்தைப் பாதியாகக் குறைத்து வசூலித்துக் கொண்டு, மறு பாதியினுல் ஏற்படுகிற நஷ்டத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளுவது பற்றி அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நேற்றே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின் இறுதியில் தெளிவாகக் குறிப்பிட்டேன். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், வேளாண்மைத் துறைக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணம் யூனிட் ஒன்றுக்கு எட்டேகால் காசுதான். ஆனுல், 12 காசு வரையிலும் போடலாம் என்பதைத்தான் மத்திய அரசு எடுத்துத் தெரிவித்திருக்கிறது. ஆந்திரம் 12 காசு போட்டிருக்கிறது. கேரளம் 8.80 காசும், மைசூர் 11 காசும் போட்டிருக்கிறது. தமிழகம்தான் எட்டேகால் காசு போட்டிருக்கிறது. இதை அதிகம் என்று கருதுவதற்கில்லை. மின்சார உற்பத்தி செலவு யூனிட் ஒன்றுக்கு 17 காசு என்றுல், அதில் பாதிக்கும் குறைவாகவே வசூலிப்பதால், கனம் உறுப்பினர் கூறுகிற யோசனைப்படி மேலும் குறைத்தால், நஷ்டம் இன்னும் அதிகமாகும். இப்போதே, மின்சார வாரியத்திற்கு அதிக லாபம் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு ஒரு பக்கம் இருக்கும்போது, மின்சாரக் கட்டண விகிதத்தை மேலும் குறைப்பதனுல், இன்னும் அந்த நிலைதான் வளரும்.

திரு. வி. டி. அண்ணமலை: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் விவசாயிகளுக்குப் பல நன்மைகளைச் செய்திருந்த போதிலுங்கூட, தற்போது வேளாண்மைத் துறையில் ஈடுபட்டு உணவு அபிவிருத்தி செய்கின்றவர்களுக்குச் சர்க்கார் கொடுக்கின்ற சலுகை குறைவாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனப் பகுதிகளில் நெல் பயிரிடுகிறவர்களுக்கு அரசாங்கம் தண்ணீர் சப்ளை செய்கிறது. அதைப்போல், மின்சாரத்தை பாசன வசதி செய்துகொண்டு பயிர் செய்கின்றவர்களைப் பொறுத்தும், அத்தகைய பகுதிகளில், மின்சாரக் கட்டணத்தைப் பாதியாகக் குறைக்கவோ, அல்லது 25 சத வீதம் மானியம் வழங்கவோ ஏன் அரசாங்கம் உதவி செய்யக்கூடாது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முன்னல் சொன்ன பதிலே முழுவதும் இதற்குப் பொருந்தும். நேற்றும் இதுபற்றி விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கி மற்ற மாவட்டங்களுக்கு வழங்கும் தஞ்சை மாவட்டத்திற்காவது இந்தச் சலுகை தரப்படுமா என்று வேண்டுவதுடன், பாதி அளவிற்குத் தரப்படவில்லை என்றுலும், ஓரளவிற்காவது சலுகை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சலுகை தரப்படுகின்றபோது, தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் அளித்து, மற்ற மாவட்டங்களைப் புறக்கணிப்பதற்கில்லை. சலுகை என்றுல், அது எல்லோருக்கும்தான் வரவேண்டும். அப்படிப் பார்த்தால், தஞ்சை

மாவட்டத்தில் தண்ணீர் இறைப்பது எளிது என்றும், மற்ற மாவட்டங்களில் தண்ணீரைக் கொண்டுவருவது மிகக் கடினமான நிலைமை என்றும், அங்கே மழையை நம்பிக்கொண்டு இருக்கிறோம் என்றும் வாதித்து, அவர்களுக்குத்தான் முதன்மை அளிக்க வேண்டும் என்று கேட்கலாம். ஆகவே, மற்ற மாவட்டங்களில் உள்ளவர்கள் அப்படிக் கேட்கும் அளவிற்கு, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இப்படிக் கேட்காமல் இருப்பது நல்லது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மின்சாரக் கட்டணம் எட்டேகால் பைசா விதிப்பது சரிதான். ஆனால், வரியாக 20 சத விதம் போட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்காவது ஒரு சலுகை, விவசாய மக்களுக்குக் கொடுக்க சர்க்கார் யோசிக்குமா?.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப் பட்ட யோசனை இல்லை.

திரு. எஸ். முருகையன் : விவசாயிகளுக்குச் சலுகை கொடுக்கும்போது, எல்லா விவசாயிகளுக்கும் கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் இரண்டு போக சாகுபடிக்கு ஏக்கராவொன்றுக்கு 40 ரூபாய்தான் வரியாகச் செலுத்துகிறார்கள். ஆனால், மற்ற மாவட்டங்களில், ஐந்து ஏக்கரா நிலம் வைத்திருக்கும் ஒரு விவசாயி மின்சாரத்தைக்கொண்டு பம்ப் செட்டை இயக்கிப் பயிரிடவேண்டுமானால், ஏக்கராவொன்றுக்கு 100 ரூபாய்க்கும் அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, பம்ப் செட் வைத்து விவசாயம் செய்பவர்களுக்கு கட்டணத்தைச் சற்று குறைத்து, இந்த ஏற்றத்தாழ்வைச் சமப்படுத்தவேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்ற பிரச்சினையை விட்டுவிட்டு, மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கிற நிலைமைகளைப் பற்றிய பிரச்சினைகள் வந்துவிட்டன. ஆகவே, அந்த முறையில் இடத்திற்கு இடம் கவனிப்பது என்பது சரியாக வராது. கனம் உறுப்பினர் அவர்கள், ஒரே சீராக அமையும் வண்ணம் ஏதாவது முறை இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சாரம் பற்றி ஏற்கனவே மூன்று நாட்கள் விவாதம் நடத்தியிருக்கிற காரணத்தால், இறுதித் துணை வினாவை திரு. சித்தன் அவர்கள் கேட்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : நேற்றைய தினம் இந்த மாமன்றத்தில் பேசியபோது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், பெரிய ஆலைகளுக்கான மின்சாரக் கட்டண விகிதம் தக்க தருணத்தில் உயர்த்தப்படும் என்று சொன்னார்கள். அப்படி உயர்த்துகிற நேரத்திலாவது, விவசாயத்திற்கான கட்டணத்தைக் குறைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் தெரிவித்த கருத்து மனதிலே கொள்ளப்படும்.